

# நான்

உளவியல் இதழ்

மனித

செயற்பாடுகள்


வைகாசி — ஆனி 1980

மலர்: 6 ● இதழ்: 3

விலை: ரூபாய் 1/=

# பொறுப்பு [RESPONSIBILITY]

## புரட்டாசி — ஐப்பசி இதழ்

- கதைகள்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- கடிதங்கள்

இன்னும் இதர சுயபடைப்புக்களை "நான்" முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சந்தா விபரம்

ஓராண்டு சந்தா ரூபா. 7/—
ஈராண்டு சந்தா ரூபா. 13/—
( தபாற் செலவு உட்பட )

தபாற்கட்டளை அல்லது காசுக்கட்டளை மூலம் "நான்" முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

○ பணம் பெறுபவர் பெயர்: "நான்" ஆசிரியர்
○ பணம் பெறும் தபாற் கந்தோர்: அம்பிட்டி

ஆசிரியர்
வின்சன்ற் பற்றிக் B. Th.

உதவி:
றெஜினோல்ட்
அமலதாசன்
அலோசியஸ் றேய்

அமைப்பு:
பேர்சி மரியதாஸ்

ஆலோசகர்கள்:
விக்ரர் குரூஸ், M.A., Ph.D.
பிரக்சீட் அன்ரனி M. A.

முகவரி:
"நான்"
அ. ம. தி பயிற்சியகம்
அம்பிட்டி.

# எல்லோரும் நல்லவரே!



மனித வாழ்க்கையை ஓர் அழகிய ரோஜா செடிக்கு ஒப்பிடலாம். அது வளரும் நிலத்தைப் பண்படுத்தி, பசளையிட்டு, காலத்துக்குக் காலம் அதன் தேவையற்ற கிளைகளை வெட்டி பக்குவமாய் பராமரித்து வந்தால் அது அழகான மலர்களைக் கொடுத்து எழிற்கோலத்தோடு காட்சியளிக்கும். மனித வாழ்க்கையும் பயன் தரும் வாழ்வாக அமைந்திட அது பண்போடு பராமரிக்கப்பட வேண்டும். ஒருமுகப்படுத்தப்படாத சிந்தனைகளும் ஒழுங்கீனமான செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்படவேண்டும். அன்றேல் விளைவது அமைதியின்மை, நெறிப்பிறழ்வு, முரண்பட்ட செயற்பாடுகள் போன்றவையே. பரம்பரைத்துவமும் ( heredity ) சூழலும் ( environment ) ஒருங்கிணையாவிடில் சிந்திக்கும் திறனில் ஓர் ஒழுங்கமைப்பு ( harmony ) காணப்படாவிடில் மனித செயற்பாடுகளில் தெளிவுக்குப் பதிலாகக் குழப்பமே கூடுதலாகக் காணப்படும்.

அறிஞர் ஜோண் பவலின் கூற்றுப்படி, எப்பொழுதும் நிர்ணயிக்கப்படமுடியாதவையே செயற்பாடுகள்; ஏனெனில், அவை சுதந்திரமானவை. எனவே, ஒருவனது மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டு அவனைப் புறக்கணியாதிருப்போம். எந்நிலையில் வாழ்பவனையும் நல்நிலையில் வாழவைப்பதே எமது இலட்சியமாக அமையட்டும். 'எல்லோரும் நல்லவரே' என்று உலகம் பூரிப்படைய, மனித செயற்பாடுகளைப் புரிந்து, புது உலகம் படைப்போமா?

— ஆசிரியர்

# ஒரு குழந்தை மனிதன் ஆகின்றது

ஒரு மனிதனது செயற்பாடுகளில் 60% அவன் தனது தாயின் வயிற்றில் உருவாகிய நாளில் இருந்து 6 வயது பூர்த்தியாகும்போது பெறப்பட்டு விடுகின்றது என்று உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஒரு குழந்தை தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கும் போது தாய்க்கு ஏற்படும் உடல், உள மாற்றங்கள் அனைத்தும் குழந்தையையும் தாக்குகின்றது. அந்தக் குழந்தை பிறந்த பிறகு பெற்றோரின் பொருளாதார, சமுதாய நிலை தாயிற்கும் தந்தைக்கும் இடையில் நிலவும் பரஸ்பர உறவு, பெற்றோருக்கும் அவர்களின் மற்றைய பிள்ளைகளுக்கும் இடையிலான பாசம், பெற்றோருக்கும் அயலவர்க்கும் இடையிலான உறவு மற்றும் இன்னோரன்ன சூழ்நிலைகளின் விளைவே ஒரு குழந்தையின் செயற்பாடாக அமைகிறது.

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் தன்மையுடனும். இன்பதுன்பங்களில் பங்கு கொள்பவராகவும், இவையனைத்திற்கும் மேலாக கணவன் மனைவிக்காகவும் மனைவி கணவனுக்காகவும் வாழ்பவராக இருந்தால் குழந்தையும் இதே நிலையுடனே வளரும்.

இதற்கு மாறாக, கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் எந்நேரமும் சண்டை சச்சரவுகளும் கருத்து வேறுபாடுகளும் நிலவி சமாதானமும் அமைதியும் இல்லாமல் சீர்குலைந்த குடும்பத்தில் பிறந்து வளரும் குழந்தை ஓர் அமைதியற்ற நிம்மதியற்ற குழந்தையாகவே காணப்படும்.

குழந்தையானது பேசக் கற்றுக்கொள்வதற்கு முன் பெற்றோரின் அல்லது மற்றோரின் முக பாவங்களின் மூலமா

கவும், மற்றும் செய்கைகளின் மூலமாகவும், அது பராமரிக்கப்படும் விதத்தில் இருந்தும் அநேக உண்மைகளை கிரகித்துக் கொள்ளும் சக்தி மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதாக உளவியல் அறிஞரான பி. எவ். ஸ்கினர் கருதுகின்றார். இதன் விளைவாக குழந்தையின் செயற்பாட்டிலும் ஒரு திருப்பம் ஏற்படுகின்றது.

உதாரணமாக, ஒரு குழந்தை அடிக்கடி சிறுநீர் அல்லது மலம் கழிப்பதனால் தனது தாயை சலிப்படையவும் சிரமப்படுத்தவும் செய்யலாம். இந்நிலையில் குழந்தையானது தாயின் முகபாவனையில் இருந்தும் மற்றும் தான் சுத்தம் செய்யப்படும் விதத்தில் இருந்தும் தனது பராமரிப்பில் ஏற்படும் சிரமத்தை உணர்கின்றது. இந்நிலையில் தாயை சிரமத்திற்கு உள்ளாக்காமல் இருக்கவும் அவளை மகிழ்ச்சிப்படுத்தவும் அடுத்த அடுத்த முறைகளில் சிறு நீர், மலம் ஆகியனவற்றை கழிக்க வேண்டிய நேரத்தில் கழிக்காமல் மிகவும் சிரமத்துடன் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது. இதன் உடன் விளைவு மலச்சிக்கல் ஆகும். இவ்விதம் தன்னைத்தானே கட்டுப்படுத்தும் முயற்சி குழந்தையின் மனதில் பதிந்து காலக்கட்டத்தில் தனது சகல உணர்ச்சிகளையும் தன்னையறியாமலே கட்டுப்படுத்தப் பழகிக்கொள்கிறது. அச்சம் அதனை ஆட்கொள்கின்றது. ஒரு சொந்தத் தாயினால் அன்புடன் வளர்க்கப்பட்ட ஒரு குழந்தையை ஓர் ஆயாவினால் பராமரிக்கப்பட்ட ஒரு குழந்தையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்வுண்மை தெளிவாகின்றது.

ஒரு குழந்தை நல்ல செயற்பாடுகளுடைய ஒரு மனிதனாக வளர்வதற்கும், தீய செயற்பாடுகளுடைய ஒரு மனிதனாக வளர்வதற்கும் பெற்றோரே காரணம். ஆக்குவதும் அழிப்பதும் அவர்களே.

ஏ. ஈ. ஜீவரத்தினம்

உளவியல் ஆராய்ச்சிக் கட்டுரை

# மனித செயற்பாடுகள்

வி. பற்றிக், தும்பற வளாகம்

மனிதனின் சிந்தனைகள், சுய உணர்வுகள், உரையாடல்கள், உறவாடல்கள் இவற்றின் விளைவாக தனியனாக அல்லது கூட்டாக ஏற்படும் வினைத் தொகுப்பே மனித செயற்பாடுகளாகும். குழந்தை பசி எடுத்ததும் அழுகின்றது. அழுகை - குழந்தையின் செயற்பாடு. அதன் உடற்தேவை ஒன்று பூர்த்தி செய்யப்படவேண்டும் என்பதைத் தாய்க்கு வெளிப்படுத்துகின்றது. தெருவழியே ஒருவன் போய்க்கொண்டிருக்கின்றான். திடீரென அவன் முன்னே ஒரு மோட்டார் வாகனம் வருகின்றது. உடனே பாய்ந்து அவன் ஓரம் போய்விடுவான். தன் உயிரைக் காக்கவேண்டும் என்ற அவனது உள்ளுணர்வு அவனை அவ்விதம் செயற்படவைத்தது.

## மூன்று சக்திகள்:-

மனோதத்துவ நிபுணர் புரொயிட்டின் (Freud) கூற்றுப்படி மனித செயற்பாடுகள் அனைத்தும் பாலுணர்விலே தங்கியுள்ளது. அவரின் கருத்துப்படி மனித ஆளுமைச் சக்தியை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(1) 'இட்' ( 'Id' ) — இதுவே ஒவ்வொரு ஆளினதும் உணர்வுச் சக்தியின் இருப்பிடமாகும். துன்பத்தைத் தகர்வதும் இன்பத்தை எய்துவதுமே இதன் இலட்சியமாகும். மற்றவர்களைப் பற்றிய கரிசனை எதுவுமின்றி தன் சொந்த நலம் நாடி செயற்படவைப்பது.

(2) 'அகம்' (Ego) — வெளி உலகத்தோடு, மற்றவர்க ளின் எதிர்ப்பார்ப்புகளோடு 'இட்' இணைவதால் வெளிப்படுவது. இது ஓரளவு நியாயமானதாகவும் இயற்கைத் திட்டத்தோடு ஒத்ததாகவும் காணப்படும். இது மறைமுகமாகவோ அன்றேல் வெளிப்படையா கவோ மனித செயற்பாடுகளை ஒருங்கமைக்கும் தன்மை வாய்ந்தது.

(3) 'உயரகம்' (Superego) — இது, "அதைச் செய் யாதே; இதைச் செய்" என்று அறிவுறுத்தும் வெளி உலகத்தாரின் உந்தலினுல் உருவாகும் மனநிலைச் சக்தி யாகும். மறை, நெறி, சமூக கோட்பாடுகள் சார்பாக மனித செயற்பாடுகளை வளர்விக்கும் தன்மை வாய்ந்தது.

"'பாலுணர்வு அல்ல, உயிர் வாழவேண்டும் என்ற உந்துகை அல்லது வாழவேண்டும் என்ற தணியாத தாகமே உளசக்திக்கு அடிப்படை'' என்று உளவியலாளர் யுங் (Jung) புரொயிட்டின் கூற்றுக்கு முரணுகக் கூறுகின்றுர்.

## பரம்பரைத்துவமும் சூழலும்:-

பெரும்பாலும், மனித செயற்பாடுகளை பரம்பரைத் துவம் (Heredity), சூழல் (Environment) ஆகிய இரு பெரும் காரணிகள் நிர்ணயிக்கின்றன. ஒருவனைப் பார்த்து, 'இவன் குணம், பேசும் விதம் இவனது தகப் பனையே பிரதிபலிக்கின்றது' என்று சிலர் கூறுவது பரம் பரைத்துவம் மூலம் சில பண்பாடுகள் தொடர்கின்றன என்பதையே குறிக்கின்றது. அதேவேளை ஒரு சிலரில் பெற்றேரின் நடத்தைக்கு எதிர்மாறுக பிள்ளைகளின் நடத்தை அமைவதைக் காணலாம். உதாரணமாக, பொறுமைக்கு இலக்கணமாகத் திகழும் பெற்றேருக்குப் பிறந்த பிள்ளை முற்கோபிக்குரிய தன்மைகளைக் கொண் டிருக்கலாம். அன்றேல், இசை நாட்டம் கொண்ட பெற்றேருக்கு இசையை வசையாகக் கருதும் பிள்ளை பிறக்கலாம்.

பரம்பரைத்துவத்தோடு இணைந்து, அல்லது எதிர்த்து சூழலும் மனித நடத்தையில் பெரும் தாக்கத்தை ஏற் படுத்துகின்றது. கொலைஞர் கூட்டத்திலே வாழ்பவ னுக்கு கொலை ஒரு கலையாகின்றது. இளைஞர் கூட்டத் திலே வாழ்பவனுக்கு முதுமை வெறும் நிழலாகின்றது. கலைஞர் கூட்டத்திலே வாழ்பவனுக்கு சுமையும் ஒரு சுவையாகின்றது. ஒருவனது தனித்துவமும் (Individuality) அதன் மாறுபட்ட வேறுபாடுகளும் பரம்பரைத்துவத்தினதும் சூழலினதும் படைப்பாகும். இசைத்திறனை இயல்பாகக் கொண்ட ஒருவனுக்கு இசைப் புலவர்களோடு கூடி வாழும் சந்தர்ப்பம் கிடைக்குமென்றால் (அதாவது, அத் தகைய சூழல் அமையுமென்றால்) ஒரு காலம் அவன் இசைச் சக்கரவர்த்தியாக மாறலாம். அதேவேளை பாடும் திறன் அறவே இல்லாதவன் பாடகர் சூழலிலே வாழ்ந்தாலும் பாடகனாக மாறுதல் அரிது. இயற்கைத் திறனும் அது சார்ந்த சூழலும் ஒருங்கே அமைந்திருந் தால் மனிதன் தன் செயற்பாடுகளில் தன்னிறைவு காண்பது இலகு.

## பயிற்சியும் செயற்பாடும்:-

பயிற்சி மூலம் அல்லது அனுபவம் வாயிலாக ஏற் படும் செய்கை மாற்றமே அறிவாற்றலுக்குத் துணை புரிகின்றது. பி. எவ். ஸ்கினரின் (B. F. Skinner) பரி சோதனையை இங்கு கவனிப்போம்:

பசியால் வாடும் ஓர் எலியை 'ஸ்கினர் - பெட்டி' (Skinner - Box), அதாவது, தாழ்ப்பாளை அழுத் தியதும் உணவு கிடைக்கக்கூடிய வகையில் செய்யப் பட்ட பெட்டியினுள் விட்டு, அடைத்து வைப்போம். ஆரம்பத்தில் எலி அங்கும் இங்கும் பாய்ந்து அல்லோல கல்லோலப்பட்டது; சடுதியாக தாழ்ப்பாளை அழுத்தி யது - உணவு கிடைத்தது. இப்பொழுது எலி தேவை யற்ற செயற்பாடுகள் அனைத்தையும் தவிர்த்து தேவைக் கேற்ப தாழ்ப்பாளை அழுத்துவதைக் காணலாம். இப்

பரிசோதனையின் முடிவுகளைப் பின்வருமாறு நிரைப் படுத்தலாம்:

1வது பிராணியை செயற்பாட்டிற்குத் தூண்டுவித்தல்.
2வது சரியான உத்தரவாதத்தை தேர்ந்தெடுத்தல்.
3வது தேவையற்ற உத்தரவாதங்களைத் தவிர்த்தல்.
4வது வெற்றி தரும் செயற்பாட்டை உறுதிப்படுத்தல்.

மேற்கூறிய பரிசோதனையின் முடிவுகளைப் போன்று மனித செயற்பாடுகளும் தூண்டுதற் காரணிகளின் விளைவுகளாக அமைகின்றன. அனுபவ வாயிலாக மனிதன் தன் நடத்தைகளில் எத்தகையவற்றைத் தவிர்க்க வேண்டும், எத்தகையவற்றை அனுசரிக்க வேண்டும் என அறிந்துகொள்கின்றான். உதாரணமாக, ஓர் இளைஞன் தன் காதலியோடு உரையாடுகின்றான். இடையில், அவன் அவளது ஏழ்மைமையைப் பற்றி இழிவாக கதைக்கிறான். உடனே அவளது முகம் கறுக்கின்றது; சோகம் அவளது கண்களை நனைக்கின்றது. இதிலிருந்து அவ்விளைஞன் தன் காதலியோடு கதைக்கும்போது தான் எத்தகையவற்றைத் தவிர்க்கவேண்டும் என்று உணர்ந்திருப்பான்.

## தேவைகளும் தூண்டற் காரணிகளும்:-

"நிறைவுபடுத்தப்பட்ட தேவை நடத்தையின் தூண்டற் காரணியாக அமையாது" என்று புறொபஷர் டக்ளஸ் மக்கிறேகர் (Professor Douglas McGregor) கூறுகின்றார். மனிதத் தேவைகள் எண்ணற்றவை; முடிவில்லாதவை. ஒரு தேவை பூர்த்திசெய்யப்பட்டதும் இன்னொரு தேவை எழுகின்றது. இவ்வாறு தொடர்ந்து மனிதனில் புதுப்புதுத் தேவைகள் எழுவதையும் பூர்த்தி செய்யப்படுவதையும் தொகுத்து செயற்பாட்டுக்கோவை என அழைக்கலாம். அதாவது, நிறைவுபடுத்தப்படாத தேவை அல்லது புதிதாக எழுந்த தேவை தூண்டற் காரணியாக அமைந்து மனித செயற்பாட்டைத் தோற்

றுவிக்கிறது; செயற்பாடு தேவையைப் பூர்த்தி செய்ய முனைகின்றது.

தேவைகளை மாஸ்லோ (Maslow) பின்வருமாறு நிரைப்படுத்துகின்றார்:

1வது, உடற் தேவைகள்: பசி, தாகம், தூக்கம், பாலுணர்வு.

2வது, பாதுகாப்புத் தேவைகள்: தற்பாதுகாப்பு, ஆபத்துக்களைத் தவிர்த்தல்.

3வது, சமுதாயத் தேவைகள்: கூடி வாழுதல், ஏற்றுக் கொள்ளப்படல், அன்பையும் நட்பையும் பகிர்தல்

4வது, தன்மதிப்புத் தேவைகள்: தன்மானம், தன்னம்பிக்கை, பிறர் தன்னை மதிக்க நடத்தல்.

5வது, தன்னிறைவுத் தேவைகள்: தன்னைத் தானாக உணர்தல், தன்னில் முழுமை பெற விரும்புதல்.

இவ்வாறு பற்பல தேவைகள் மனிதனை பலதரப்பட்ட முறைகளில் செயற்பாட்டிற்குத் தூண்டுவிக்கின்றன. சுருங்கச் சொல்லின், மனித செயற்பாடுகள் அனைத்தும் மனித தேவைகளின் உந்தலினால் அவற்றை நிறைவு படுத்த எழுந்த விளைவுகளின் தொகுப்பாகும்.

> வீடு பெண்களின் சிறைச்சாலை,
> மனைவிகளின் தொழிற்சாலை.
> — பெர்னாட் ஷா

சிறுகதை

# மன வயிறுகள்

காவலூர் எஸ். ஜெகநாதன்

இரவு கஞ்சித் தண்ணீரைக் கலக்கிக் குடித்ததாக வயிற்றுக்கு ஞாபகம். அதுமட்டும் எவ்வளவு நேரத்துக்கு வயிற்றை அடக்கப் போதும். அடங்கிக் கிடந்த இவ்வளவு நேரம்கூட அதிகமானதுதான் அவளது வயதுக்கு. ஆனாலும் பழகிப்போய் விட்ட தாமதம்.

சுள் என்று வயிறு கடிக்கும்போது சொல்லிவைத்தது போல் ஆதவனும் குறிபார்த்துச் சுடுவான். ஒட்டைலயம்.

அவள் உடலை முறித்துப் புரளும்போது கைக் குழந்தை கணக்காகக் கதறும். அவளாலென்ன பாலா கொடுக்க முடியும்...... அவளும் சிறுமி. தங்கையை மார்போடு அணைப்பாள்.

அம்மா அவள் அப்போதே பால்மரக் காட்டில் பாடுபடப் போய் விட்டாள். அப்பா என்றொருவர் முன்னர் இருந்தவராம். அவளுக்கு ஞாபகமில்லை. அம்மா பாவம், அவள் மட்டும் என்ன செய்வாள். தன்னை ஆனமட்டும் வருத்தி அவள் உழைப்பதும் அரைவயிறு கால்வயிறுக்குத்தான் போதும். அவளும் அம்மாவோடு கசங்கி உழைக்கப் புறப்பட்டு விடுவாள், இன்னும் எட்டு வருடங்கள் பசிதாங்கி வென்றால்.
.... அவளுக்கு இப்போது ஆறுவயதுதான் இருக்கும்.

'லோலோ' என்று ஒரு பாட்டம் கத்தி குழந்தையைத் தூங்க வைக்க முயலுகிறாள். லோலோ வயிற்றை நிரப்புமா? அழுக்கே வடிவாகிப்போன தலையணையின் ஒரு மூலையை வாயில் திணிக்கிறாள். ங்.....ங் என்று

விட்டு குழந்தை அதைச் சப்புவதில் பசி தீர்க்க முனை கிறது.

அவள் லயத்தின் முற்றத்தில் இறங்கி நடக்கிறாள். கால்போன திசை வழியே....

வீதியோரத்து மர நிழலில் நாலைந்து சிறுவர்கள் இருந்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். விளையாட்டா அது? சமையலறை அரங்கேற்றத்திற்கு ஒத்திகை. வசதிபடைத்தவர் மடியில் வாழப் பிறந்தவர்களுக்கு விளையாட்டு.

வழியற்றவர்களின் மடியில் சாகப்பிறந்தவர்களுக்கு .... 'சமைத்து' விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் வாழவும் சாகவும் பிறந்தவர்களின் கூட்டு. அதுகளுக்குத் தெரியுமா - ஏற்ற இறக்கம்.

அவளும் அவர்களோடு போய் ஒட்டிக்கொள்கிறாள். வயிறு கடிக்கிறது. 'பசிக்குதடி', அவள் விளையாட்டுக்காக பொய் கூறவில்லை. உண்மையிலேயே உயிர்போகும் வேதனை.

எங்க வீட்டிலே சோறு..... ஒரு சிறுமி மணலைச் சிரட்டையில் எடுத்து அடுப்பில் வைக்கிறாள். அந்த மூன்றுகல் அடுப்பின் கீழ் குச்சிகளை செருகிவிட்டு 'ஊ.. . ஊ' நெருப்பில்லாமலே நளபாகம். ஒரு சிறுமி இலைகளைக் கிழித்துப் போட்டு 'கறி' சமைக்கிறாள்.

'எனக்கு ரொட்டிதான் வேணும்' - சிறுவன் அடம் பிடிக்கிறான். அதை ஏற்று ஒருத்தி மண்ணை நீரில் குழைக்கிறாள்.

'எனக்கு சோறு... ரொட்டி எல்லாம் வேணும்' - அவள் விளையாட்டுக்காகக் கூறவில்லை.

உண்மையிலேயே . . . மனமறிந்த பொய்யை உண்மையாக்கி மனம் நிறைகிறது. வயிறே நிறைவதுபோல் ...முன்னால் உண்மையாகவே சமையல் நடப்பதுபோல் ..

விளையாட்டு சலித்து சிறுவர்கள் கலைந்துவிட்டார்கள். அவள் மட்டும் . . . வயிறென்ன மனமா சும்மாவே நிறைவதற்கு . . . அது துடிக்கிறது. பசி கண்ணை மறைக்க விழுந்தடித்து மண் சோற்றை வாயில் திணிக்கிறாள் தின்னுகிறாள்.

அவள் மண்ணைத் தின்ன . . . .

மண் அவள் தங்கையைத் தின்னப்போகின்றது.

அழுக்குத் தலையணையில் தன் தங்கையின் ஜீவன் அடங்கிவிட்டது அப்போது அவளுக்கு தெரியாது.

---

## குறுக்கெழுத்துப் போட்டி 2

| | | |
|---|---|---|
| 1 | | |
| | 2 | 3 |
| | 4 | |

1 மாற்றான் வீட்டு மல்லிகையும் —— தரும் என்பதை சிலர் மறந்து விடுகின்றார்கள் (இடமிருந்து வலம்)

1 கருத்துக் குவியல் 8இன் காரணகர்த்தாவின் கடைசி எழுத்து மறைந்து விட்டது. (மேலிருந்து கீழ்)

2 நிழலிருந்து கிடையாதது மரத்திலிருந்து கிடைக்கும். அது (வலமிருந்து இடம்)

3 ——அகத்தே பல மாறுபட்ட சக்திகள் செயற்படுகின்றன. (கீழிலிருந்து மேல்)

4 ——வேடம் பூண்டு சிலர் வாழ்வதால் பலர் துன்பத்திற்கு ஆளாகின்றார்கள். (இடமிருந்து வல்ம்)

# கருத்துக் குவியல் - 8

## மனிதனும் சமுதாயமும்

### மனிதனே ஆள்கின்றான்:

தனிமனிதன் பலர் சேர்ந்த கூட்டுறவே, சமூகமாக மாறுகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தில் பெரும் பங்கை வகிக்கிறான். அவனிடத்தில் ஏற்படும் மாற்றங்கள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இன்றைய உலகைப் பார்க்கும் பொழுது நடை, உடை, பாவனைகளில் எவ்வளவோ மாற்றங்கள் தோன்றியுள்ளதைக் காணலாம். இம்மாற்றங்கள் எப்படித் தோன்றியிருக்க முடியும்? ஒரு மனிதனிடத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் பலர் பின்பற்றிச் செயற்படுவதால் மேற்கூறிய மாற்றங்கள் தோன்றியிருக்கலாம் என்பது கண்கூடு. சமூகத்தால் மனிதன் ஆளப்பட்டிருந்தால் இன்றைய நாகரீக உலகம் தோன்றியிருக்க முடியாது. ஆதி சமூகத்தினர் இப்படிப்பட்ட மாற்றங்களை விரும்பியிருக்கமாட்டார்கள். இப்படி விரும்பாதிருக்க சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் மனிதன் சமூகத்தை ஆள்வதேயாகும்.

— கி. கிறிஸ்தோப்பர், யாழ்ப்பாணம்

### சமூகம் ஆள்கின்றது:

மனிதன்தான் சமூகத்தை ஆளவேண்டும். ஆனால் நடைமுறையிலோ இன்று அவன் சமூகத்தால் ஆளப்படுகின்றான். மனிதன் பிறந்ததும், அவன் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்ற பெரிய பட்டியல் அவனது பிறந்த நாள் பரிசாக அளிக்கப்படுகின்றது. நீ இப்

படித்தான் வாழ வேண்டும் என்று அவனைச் சமுதாயம் வற்புறுத்துகின்றது. இல்லையேல், அவன் சமுதாயத்தால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுவான் இத்தனைக்கும் பயந்தவன் மனிதன்; பாவம்! இறுதியில் சமுதாயமே அவனை ஆள்கின்றது.

— காவலூரர் எல்மோ சிங்கராயர்

● **மனிதன் சமுதாயத்தின் அடிமை:**

சமுதாயத்தை உருவாக்குபவன் மனிதன். அச்சமுதாயத்தை தனது அறிவுப் புலனாலும் ஆட்பலத்தாலும் ஆள வேண்டியவன் மனிதன். சமுதாயம் தன்னை ஆட்கொள்ள விடாது விழிப்பாக இருப்பதும் அதன் கட்டுக்கோப்புகளுக்கு இரையாக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதும் மனிதனின் தலையாய கடமை. ஆனால் இன்று மனிதன் சமுதாயத்தின் அடிமையாக வாழ்கின்றான்; சமுதாயத்தால் வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குத் தலைவணங்குகின்றான். இந்நிலையில் சமுதாயம் மனிதனை ஆள்கின்றதென்றால் அது மிகையாகாது.

— போல் நட்ஸ், உரும்பிராய்

● **சமூகச் சுழியில் சிக்கிவிட்டான்:**

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் உண்டு. சாதி, குலம் என்று பிரிவினைகள் உண்டு. இவை பிழை எனத் தோன்றினும் மனிதன் ஏன் அதை ஏற்றுக்கொள்கின்றான்? காரணம் சமூகமே அவனை ஆள்கின்றது. சமூகச் சுழியில் சிக்கிவிட்டான் மனிதன்.

— புலோலியூர் ஜேம்ஸ்.

● **சமூகமே ஆளட்டும்:**

பெரும்பாலும் சமுதாயத்தால் மனிதன் ஆளப்படுவதே இன்றைய உலக நடைமுறையில் சாத்தியமாக இருக்கின்றது. ஏனெனில், சமூகத்தால் ஆளப்படும் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்பவ

ணுகின்றான். அடிப்படை நேச உணர்வுகளான அன்பு, கனிவு, பாசம், சமத்துவம் போன்றவை அவனை ஆட்கொள்கின்றன. இதன் காரணமாக அவன் ஒற்றுமையாக வாழ முற்படுகின்றான். இப்படியான சமுதாய அமைப்பே உண்மை ஜனநாயகம் எனப்படுகின்றது. உண்மை ஜனநாயக அமைப்புக்கு மக்களிடையே அதிக வரவேற்பும் ஆதரவும் இருப்பதில், அதுவே இன்றைய உலக அரசியலாக அமைவதால் ஒவ்வொரு மனிதனும் சமூகத்தால் ஆளப்படுகின்றான் என்பதே உண்மையாகும். மனிதன் சமுதாயத்தை ஆள்கின்றான் என்பதை சர்வாதிகாரம் என்கி கிறோம். அதனால் அழிந்தவர்கள் பலர் என்று வரலாறு குரல் கொடுக்சின்றது.

— மாலினி, மன்னார்.

# கருத்துக்குவியல் 9

## தவறுகள்

### தண்டனைக்குரியவையா ?

உங்கள் கருத்துக்களை உடனே எழுதி அனுப்புங்கள்.

சிறுகதை

# பகடைக் காய்கள்

புசல்லாவை இஸ்மாலிகா

அது கடைசி 'பீரியட்' நான் கரும்பலகையில் எண்களை எழுதிவிட்டு 'இரண்டாம் வகுப்புப் பிள்ளைகள் எல்லோரும் இதைப் பார்த்தெழுதுங்கள்' என்று கூறிவிட்டு அமர, முன்வரிசையில் அமர்ந்திருந்த 'ஜெனி'யின் பார்வை என்மேல் நிலைத்திருப்பது தெரிந்தது. வழமைபோல் அவன் தன் வீட்டு நடப்புகளை தன்னிடம் கூற தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது புரிந்தது. சமீபகாலத்தில் அவன் தாய் ஷெரினுக்கும் தகப்பனுக்கும் நேர்ந்துள்ள போராட்டத்தில் மொட்டான அவனும் சிக்கி, என்னை ஒரு ஆதரவாக நினைத்து, தனக்குத் தெரிந்த முறையில் தன் குடும்பத்துள் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கூறுவதும், ஷெரினோடு பள்ளி நாட்களிலிருந்தே பழகிய காரணத்தால் அக்கறையோடும் வேதனையோடும் அதைக் கேட்டு அவனுக்கு ஆறுதல் சொல்வதும் எனக்கு வழக்கமாகி விட்டநிகழ்ச்சி.

நான் அவனையே நோக்குவதைக் கண்டதும் என்னிடம் ஓடிவரும் ஜெனி கூறுகிறான்: ''டீச்சர், டெடி நேற்று குட்டித் தங்கச்சியையும் அம்மாவிடம் இருந்து தூக்கிக் கொண்டு வந்துவிட்டார். இனி எங்களை அம்மாகிட்டே அனுப்பவே மாட்டாராம்! நாங்க ரெண்டுபேரும் இனிமே அம்மாவை மறந்திடனுமாம், பார்க்கனும்னு சொன்ன கொன்னு போடுவாராம். நேத்து அப்பா நல்லா குடிச்சிட்டு வந்து அம்மாவை ரொம்பநேரம் திட்டினார் டீச்சர், வழக்கும் முடிஞ்சுது, அவ வாழ்க்கையும் முடிஞ்சுதுன்னு சுவருள குத்தினர் டீச்சர். நாங்க பயந்துபோய் வேலைக்காரனோட ஒட்டிக்கிட்டோம்.''

அவனது கடைசி வார்த்தைகள் எனது நெஞ்சைத் தைத்தது. அவளது டிவோஸ் கேஸ் முடிந்து விட்டது என் பதையும் விளக்கியது. அவளை அழவிட வேண்டுமென்று பண பலத்தால் குழந்தைகளையும் பறித்துக் கொண்டு விட்டானே பாவி என்று மனம் பரிதவித்தது. ஜெனியின் கலங்கிய வட்டக் கண்கள் எனக்கு ஷெரீனை நினைவுபடுத்து கின்றன. ஷெரீனுக்கு இப்படி ஒரு வாழ்வு அமையுமென்று எவருமே எதிர்பார்க்கவில்லைதான்.

ஷெரீன் செர்ரிப் பழங்களைப்போல எவ்வளவு அழகான வள். பள்ளி நாட்களில் கொழும்பு கொன்வன்டில் அவ ளோடு 'போடாகி' இருந்து படித்த நாட்கள் நினைவில் வருகின்றன. குட்டையாக வெட்டப்பட்ட மயிரும், வித விதமான உடையுமாக அவள் எப்போதும் கலகலப்பாக நடமாடுவாள்; வெளியே நாகரீகமாகத்திரியும் அவள் இத யத்தால் அன்பும், இரக்கமும், அறிவும் நிறைந்தவள், எளி மையானவள்; எந்த நிகழ்ச்சியானாலும் அவள் இருப்பாள், எல்லோரோடும் ஒத்துப்போவாள், உதவி செய்வாள், ஒரு தனித் தன்மையுடன் அவள் பள்ளிக்கூடத்தில் விளங்கினாள்.

அவள் பள்ளிக்கூட தலைவியாகியபோது அவளது திற மைகள் தெரியவந்தன. அவள் வெறும் ஷெரின் இல்லை, நிறைய இலட்சியங்களை சுமந்துச் செயலாற்றத் துடிப்ப வள் என்பதும் தெரிந்தது. எப்போதும் ஏதாவது அறிவு நூல்களோடு, திரியும் அவளை, வெளிப்படையாகத் தன் கருத்துக்களை ஆணித்தரமாகப் பேசும் அவளை, பள்ளிக் கூடமே சற்று வியப்போடுதான் பார்த்தது. ஷெரீன் ஒரு முறை பெண்களாண்டு நிகழ்ச்சியின்போது கூறிய கருத் துக்கள் இன்னும் நினைவில் நிற்கின்றன. சீதனம் வாங்கும் ஆண்களை எந்தப் பெண்ணும் திருமணம் செய்ய முன்வரக் கூடாது. பெண்கள் ஆண்களைவிட அறிவிலோ திறமை யிலோ குறைந்தவர்கள் அல்ல. அவர்களது திறமைகள் பயன்படுத்தப்பட வேண்டும். வெறும் கவர்ச்சிப் பொரு ளாக, வியாபாரசாதனமாக, வெறும் பொம்மைகளாக

இருக்கும் பெண்கள் நிலை மாறவேண்டும். பதிகொடுமை, மாமியார் கொடுமை, இவைகளை போராடியாவது வெல்லத்தான் வேண்டும், பெண்ணுக்குத் தன் தனித் தன்மையைப் பேணும் உரிமை இல்லாவிட்டால், ஒரு சமூகம் எத்தனை உயர்ந்தாலும் பலனில்லை. அதுவெறும் போலி வளர்ச்சிதான்!

அன்று அவனது சுதந்திரவேட்கை புரியாவிட்டாலும்கூட, அவள் கையை உயர்த்தி ஆவேசத்தோடு பேசிய அந்த அழகை நாங்கள் மிகவும் இரசித்துக் கொண்டிருந்தோம், பள்ளிக்கூடத்தைவிட்டு விலகிய பின்பு, எங்களது எண்ணங்களெல்லாம் வேலை தேடுவதில் முனைந்திருந்தபோது அவள் பத்திரிகைகளிலும் சமூகசேவா இயக்கங்களிலும் முழங்கிக் கொண்டுதான் இருந்தாள். அப்போது எனக்கு 'ஆசிரியை பதவி' கிடைத்த சமயம், காற்றோடு காற்றாக ஒருநாள் அவள் வெளிநாட்டு நிறுவனமொன்றில் வேலை செய்யும் பெரிய இடத்துப் பையனொருவனை திருமணம் செய்யப்போகும் செய்தி காதில் விழுந்தது. சில மாதங்களுக்குப் பிறகு அதை உறுதி செய்வது போல அவளது திருமண அழைப்பிதழ் கிடைத்தது.

திருமணத்திற்குச் சென்றிருந்தபோது, ஆடம்பரமான அத்திருமண நிகழ்ச்சி, அவளது புகுந்த இடத்தின் செல்வத்தை விளக்க, ஷெரீனின் கைப்பிடித்த மைக்கலின் அழகும், பேச்சும், பக்கத்தில் இருந்தவர்கள் அவனைப்பற்றிக் கூறிய புகழுரைகளும் இளவயதில் மைக்கல் தந்தையுடன் வெளிநாட்டில் இருந்தபோது அங்குதான் தன் ஆரம்பக் கல்வியை தொடங்கி படித்தான் என்று ஷெரீன் மகிழ்ச்சியோடு சொன்னதும் ஷெரீன் தேர்ந்தெடுப்பதிலும் வெற்றியடைந்திருப்பது எனக்கு பெருமையாக இருந்தது. அவள் அதிஸ்டக்காரி என்று நினைத்துக் கொண்டேன். தன் இலட்சியத்தின்படியே, தன்னைப்போல முற்போக்கான, சகல திறமைகளும் கொண்டொருவனை பெற்றமைக்காக வாழ்த்தினேன்.

காலங்கள் மெல்ல மெல்ல உருண்டோடின. ஒரு நாள் தற்செயலாக வீதியில் சந்தித்த அவளைப்பார்த்த போது திடுக்குற்றேன். திருமணமாகி கணவனுடன் இருக்கும் மனநிறைவு அவள் முகத்தில் இல்லை. ''என்ன ஷெரீன் சுகமா?'' என்று நான் கேட்டபோது, எதையும் அதிகம் மறைத்து பொய் சொல்ல விரும்பாத அவள், ''ஒரு கிளி தங்கக் கூட்டில் சிறைபட்டு விட்டது ஷீலா'' என்றாள். நான் திடுக்குற்றவளாக அவளது முகத்தைப் பார்த்தேன். ''எவ்வளவோ சிந்தித்து முடிவு செய்யும் என்னைப் போன்றவர்களே வாழ்க்கையில் தவறு செய்ய நேர்கின்றபோது கோடிக்கணக்கான பாமர பெண்கள் வாழ்க்கையலைதனில் சிக்கித் தவிப்பது இயல்புதான்'' என்று கூறியவளை ஒன்றும் புரியாமல் நான் நோக்கினேன். அவள் தொடர்ந்தாள்: ''ஷீலா, எத்தனையோ முன் யோசனையுடன் சிந்தித்துப் பழகி, மைக்கலின் ஆரம்பகால வெளிநாட்டு கல்வி, அவர் வளர்ந்த முறை, அவரது சுதந்திரமான முற்போக்கான பேச்சு, அவரது அன்பு இவையனைத்தையும் எடைபோட்டுத்தான் கடைசியில் அவரை திருமணம் செய்ய சம்மதித்தேன். ஆனால் இப்போதுதான் அவரொரு சுயநலக்காரர், வெறும் வாய்ச்சொல் காரர் என்பது புரிகிறது. அவர் எவ்வளவு சாமர்த்தியமாக என்னிடம் நடித்திருக்கிறார் பார். அவருக்குத் தேவை வெறும் பணம், அதுதரும் மதிப்பு, போலி கௌரவம், குடி, கூத்து இத்யாதிகள்.

நான் அப்படி வளரவில்லையே ஷீலா! நான் பார்த்துப் பார்த்து வளர்த்த என் கொள்கைகளை எப்படி குழிதோண்டி புதைப்பேன். எல்லாப் பெண்களையும் போல வெறும் அழகுப் பொம்மையாக, விருப்பு வெறுப்பற்ற நடமாடும் பிணமாக எப்படி வாழமுடியும்? இந்த ஆண்கள் மகா சுயநலக்காரர்கள்; பெண்கள் அவர்களது அடிமைகள், எத்தனை வெளியில் தத்துவம் பேசும் ஆணும் ஒரு மனைவி தனித்தன்மையுடன் இருப்பதை சகிக்கவே மாட்டான், பெண்களின் மனதை

சுவருவதற்காக வெறும் வாய் வேதாந்தம் பேசிக் கொண்டு திரிவார்கள்! அடங்கிபோகும் வரைதான் பெண்ணுக்கு மதிப்பு. ஆணின் தவறை சுட்டிகாட்டி விட்டால் அவனது முதல் எதிரி மனைவிதான்.''

நீர்வீழ்ச்சியைப் போல பேரிரைச்சலுடன் கொட்டிய அவள் வார்த்தைகள் அவள் குடும்ப வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டினது. ஷெரீன் தொடர்ந்தாள்: 'நாங்கள் இருவரும் இப்போது ஒன்ருக இல்ல ஷீலா. என் மூத்த மகனையும் பறித்துக்கொண்டு அவர் அவரது பெற்ருேருடனே போய்விட்டார். இப்போது விவாகரத்துக்கான வழக்கு கோட்டில் நடைபெறுகின்றது. மற்றக் குழந்தையையும் அவர் கேட்டு கோட்டில் வாதாடுகிருர். முடிவு என்னவாகுமோ தெரியவில்லை. அவரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனல் என் குழந்தைகள்''? ஷெரீன் அழுகிருள். நான் பிரமை பிடித்தவளாக நிற்கின்றேன்.

அவள் தொடர்ந்து கூறுகிருள்: ''ஷீலா, நான் அவரோடு எவ்வளவோ போராடிப்பார்த்தேன். முடிவு தோல்வியைத்தான் கண்டது; ஒருநாள் இரண்டு பேருக்கும் எழுந்த பெரிய சண்டையில் அவர் கோபத்தோடு கூறினர்: உன்னைப்பார்த்தா எனக்குப் பரிதாபமாக இருக்கு. ஏதோ கொஞ்சம் புத்தகங்களை படிச்சு மூளையை குழப்பிகிட்டு உளருகிற மனநோயாளியா படுது. இவ்வளவு செல்வம், அழகான கணவன், இதற்கு மயங்காத பெண்கூட உலகில் இருப்பாளா? இது ரெண்டையுமே வாழ்க்கைத் தத்துவமா நெனைக்கிற பெண்களுக்குள்ளே ஒன்னு நீ பைத்தியமா இருக்கணும் அல்லது மகா அகங்காரியா இருக்கணும், முதலாவதா நீ இருந்தா, பரிதாபத்தான் படனும், இரண்டாவதா இருந்தா, கணவனுக்கு அடங்கி நடக்கத் தெரியாத நீ மனைவியாக வாழத் தகுதி இல்லாதவ.''

எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது. ஒரு கணவன் நல்லவனுக இருக்க வேண்டும் என்று

விரும்பாத மனைவி உலகில் யார் இருப்பாள்? கணவன் தன்னைப் புரிந்து, பண்புடன் இருகரங்களும் சேர்ந்தாற் போல இருக்கவேண்டுமென்று விரும்பினால், அவனது குறைகளை மாற்ற விரும்பினால்; பெண்ணுக்குரிய பண்போடு நீதி கோரினால், தனித்தன்மையுடன் இருந்தால் இது மன்னிக்க முடியாத குற்றமா? வெறும் படிப்பும் பட்டமும், முற்போக்காளர்கள், 20ம் நூற்றாண்டின் இலட்சிய புருஷர்கள் என்றெல்லாம் எம் கண்ணை மறைக்கின்றது. ஆனால் உண்மை கசக்கிறது ஷீலா, இன்று அவரை விட்டுப் பிரிந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. வழக்கு ஒருநாள் முடியும். நான் பள்ளி நாட்களில் ஒரு நல்ல பாடமாக இருந்தேன். இன்று எல்லோரும் என்னை 'பாவம்' போன்று நோக்குகிறார்கள், இதுதான் வாழ்க்கையின் கொடுமை.

அவள் துயரத்தோடு கையசைத்துவிட்டு சென்றது இன்றுபோல் இருக்கிறது. அதன் பின் மாற்றல் கிடைத்ததும் என் வகுப்பிலே ஜெனியை சந்தித்ததும் காலம் செய்த கோலம் என்றாலும் நான் நினைக்கின்றேன், பணத்தால் வாழ்க்கையை விலைக்கு வாங்கிவிடலாம் என்று நினைக்கும் படித்த முட்டாளான ஒரு கணவர், நிறைய இலட்சியக் கனவு கண்டு திருமண பந்தத்தில் அந்தக் கனவுகள் நொறுங்கிச் சிதறுவதை சகிக்க முடியாமல் மனம் சிதறிப்போகும் ஒரு மனைவி, இவர்களுக்கிடையில் பகடைக் காய்களாக பிள்ளைகள்; இரண்டு பிடிவாதக்காரர்களின் போரில் தாயின் பாசத்தை அறியாமல், சதா வெறியுடனும், கோபத்துடனும் கண்டிப்புடனும் இருக்கும் தந்தையிடம் வளர்ந்து, தாயை எண்ணியெண்ணி மாய்ந்து, மனம் வெறுத்து, விரக்தி சூழ ஒருநாள் தந்தையையும் வெறுத்து, இவனும் நாளை ஒரு முரடனாகி, குடிகாரனாகி, மனைவியை அடக்கி . . . . இந்தச் சுவடுகளை யார் பதித்தார்கள், இதற்கு யார் பொறுப்பு? விடை தெரியவில்லை.

——( யாவும் கற்பனையே )——

# வாசகர் அறிமுகம்

**என் பெயர்: வாசன்** | **ஊர்: கொழும்பு** | **வயது: 28**



என்னைப் பற்றி சில வரிகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். நான் ஒரு வியாபாரி, நான் எதையுமே திருப்தியாக, பூரணமாக செய்ய வேண்டும் என்று விரும்புகின்றவன். நித்திரைக்குச் சென்றால் நானாக விரும்பி எழுந்திருக்க நினைக்கும் வரை நன்றாக நித்திரை செய் வேன். பல்விளக்குவது என்றால் எனக்கு திருப்தி யாகும்வரை பல்துலக்குவேன். குளிப்பது என்றால் சர்வசாதாரணமாக நேரம் எடுத்துக் குளிப்பேன். இப்படி எதையுமே என் மனநிறைவுக்கு ஏற்ப செய்வதுதான் எனது பழக்கமாகிவிட்டது.

நான் நினைத்தபொழுது எழுந்திருப்பதென்றால் 8, 9 மணியாகி விடுகிறது. நான் நினைத்த அளவு குளிப்பதென்றால் வீட் டிலுள்ள மற்றவர்கள் அவசரமாகக் குளித்து வெளியே செல் வதற்குக்கூட தடையாயிருந்துவிடுகிறேன். என்னைச் சுற்றியுள் ளவர்கள் எதிலும் நான் அளவோடு இருக்கவேண்டும் என்கி றார்கள்.மனிதனாக பிறந்தவன் பூரணமாக வாழ்க்கையை அனு பவிக்கவேண்டும் என்று இப்படி நான் பழகிவிட்டேன். ஆனால் இந்த நடைமுறை எனது தொழிலில் கணிசமான அளவு வருமானத்தைக் குறைத்து விடுவது அல்லது எனது முன் னேற்றம் பாதிக்கப்படுவது எனக்குப் புரிகிறது. எனினும் ஒருநாள் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்பின் வாசன்

# "நெறிப் பிறழ்வு"
## ( DELINQUENCY )

பிறக்கும் குழந்தைகள் யாவும் சான்றோராய், பெயரும் புகழும் பெற்று நன்நெறியில் வாழவேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்க்கின்றது. ஆனால் பிறக்கும் குழந்தைகள் அத்தனையும் பெறுவோருக்கு பெரு மகிழ்ச்சி அளிப்பதில்லை. சிலர் சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்கும், ஒழுக்க விதிகளுக்கும் முரணாக வாழ முற்படுவர். சமுதாயம் சிறந்தது, முறையானது என்று கண்டுணர்ந்த வாழ்க்கை முறைக்கு முரணாக இவர்கள் நடக்க முயலுவர். இவர்களைத்தான் சமுதாயம் "குளப்படி கந்தன்" "அடங்காப் பிடாரி" என்றெல்லாம் அழைப்பதுண்டு. இவர்களின் நடத்தைப் புதிரின் விளைவாகத் தோன்றும் சில குறைபாடுகள்: பொய்பேசுதல், திருடுதல், ஏமாற்றுதல், பொறாமை கொள்ளுதல், தம்மிலும் எளியோரை துன்புறுத்தல் போன்றவையாகும்.

இவர்களுக்கு உலகம் ஒழுங்கீனமான, ஏமாற்றுகின்ற ஓர் அரங்காகத் தோன்றும். இவர்கள் எதிர்பார்ப்பதை அடைய முடியாதபடி சமுதாயம் ஒரு முட்டுக்கட்டையாக விளங்கும். இதனால், இவர்கள் தவறான வழியில் தம்முடைய விருப்பங்களை நிறைவு செய்ய முயலுவார்கள். இவர்களின் நடத்தை குறும்புத்தனமாகவும், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் முரணானதாகவும் விளங்கும். இவர்கள் தங்களை எதிர்ப்பவர்களையும், தண்டிப்பவர்களையும் பகைப்பார்கள்; அவர்களைப் பழிவாங்கத் துடிப்பார்கள். குற்றத்திற்காகத் தண்டனை பெற்றாலும் தங்கள் குற்றங்களை எண்ணிக் கலங்கமாட்டார்கள். அடுத்த முறை அகப்படாதிருக்க வழிபார்ப்பார்கள். இவ்வாறு, குற்றச் செயல்கள் இவர்கள் இரத்தத்தில் ஊறியது போன்று தென்படும்.

சமுதாயமும் இவர்கள் திருந்தவே மாட்டார்கள் என்று முடிவு கட்டிவிடும். இவ்வாறு இவர்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தினால் இவர்கள் சமுதாயத்தின் எதிரிகளாகி விடுகின்றனர்.

விலங்கியலாளர் J. P. ஸ்கொட் என்பவரின் கூற்றுப்படி "எதிர்மாறான, போரிடும் நடத்தை பல்வேறு சூழ்நிலைக் காரணிகளின் தாக்கத்தால் ஏற்படுகின்றது; பலாத்காரமான வகையில் வெளிக்காரணிகள் ஒரு மனிதனையோ அல்லது மிருகத்தையோ தாக்காதிருக்குமானால் மனிதருக்கிடையே அன்றேல் மிருகங்களுக்கிடையே சண்டையோ, குழப்பமோ இராது." பிள்ளைகளின் நடத்தை பிறழ்வுக்கு பிளவுபட்ட சமுதாயமும் ஒழுங்கீனமான பெற்றோரும் அடிப்படைக் காரணிகளாக விளங்குகின்றார்கள். பிரிந்து வாழும் பெற்றோர், ஓயாது சண்டையிடும் பெற்றோர், பிள்ளைகளைத் தவறான முறையில் அடக்கியாளும் பெற்றோர், சொல்லிலும் செயலிலும் முரண்பாடுடைய பெற்றோர், குடிவெறிக்கும் விபச்சாரத்திற்கும் அடிமையான பெற்றோர் — இவர்களே பெரும்பான்மையான நெறிபிறழ்ந்த பிள்ளைகள் உருவாக உதவியவர்கள். (இதனையே வாலிபர் செயற்பாடுகள் பற்றிய வில்லியம் கீலியின் ஆராய்ச்சி உறுதிப்படுத்துகின்றது.) வெட்கம், அச்சம், கூச்சமின்றி நன்றாகப் பழகக்கூடிய சிறுவர் கட்டுப்பாடும், பயிற்சியும் இல்லாவிடில் குற்றவாளிகளாய் மாறக்கூடும்" என்று அஸ்சென்க் (EYSENCK) கூறுகின்றார். போதியளவு பயிற்சியையும், கட்டுப்பாட்டையும் நியாயமான முறையில் தூயதாக அளிக்கவேண்டியது பெற்றோரது கடமையாகும்.

தப்பான வழியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் குற்றத்திலே தொடர்ந்து மூழ்கவேண்டுமா? நெறிபிறழ்ந்த நடத்தை கொண்ட பிள்ளையோ அல்லது முதியவரோ தமது வாழ்க்கைப் புதிருக்குத் தீர்வுகாண முடியாதா? இன்பத்தின் காரணமாக ஒரு செயல் திரும்பத் திரும்பச்

செய்யப்படும்போது அச் செயல் பலப்படுகின்றது. அதே கொள்கை அடிப்படையில் மீண்டும் மீண்டும் நன்னெறி முறைகளைக் கற்றுக் கொடுத்து பயிற்றுவிக்கும் போது அவர்கள் திருந்த இடமுண்டு.

சீர்திருத்தப் பள்ளி (Reformatory)களில் இவைதான் நடை பெறுகின்றது. இன்று, சிறைச்சாலைகளும் கூட தண்டனை வழங்குவதுடன் நின்றுவிடாது, அவர்கள் குற்றங்களை ஆராய்ந்து மீண்டும் குற்றம் செய்யாதிருக்க வேண்டிய வழி வகைகளைக் கையாளும் பயிற்சி நிலையங்களாக மாறிவரு வது குறிப்பிடத்தக்கது.

பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் குற்றங்களுக்குத் தண்டனை வழங்குமுன் அல்லது தண்டனை வழங்காது விட் டாலும்கூட குற்றத்தைக் குற்றம் எனக்கூறி அதன் தீய விளைவுகளை உணர வைப்பது அவசியம். மேலும் இவ் வாறு நெறிபிழந்த பிள்ளைகளில் பெரும்பாலானோர் தம் மிடையே சிறந்த சில ஆற்றல்களைக் கொண்டிருப்பர்; நுட்ப தொழில்களை நன்கு கற்கக்கூடியவராயிருப்பர். எனவே, பல தொழிற் துறைகளிலும், கலைகளிலும் இவர்கள் கவ னத்தைச் செலுத்துவதன் மூலம் இவர்களின் நடத்தையை வழிப்படுத்த முடியும். குடும்பத்திலும், சமுதாயத்திலும் கிடைக்கத் தவறிய அன்பு, ஆதரவு, கரிசனை, நல்லுறவு என்பவற்றை வழங்குவதன் மூலம் இவர்களது உளவியல் வளர்ச்சியை ஈடுசெய்து, இவர்களை நெறிப்படுத்த முடியும்.

— **போல் ஜீவா**

---

**காதல் அறிவாளிகளின் மூடத்தனம்,**
**மூடர்களின் அறிவாளித்தனம்.**

— **ஜான்ஷன்**

---

# நான் பதில்



கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கின்றேன். அவள் மற்ற ஆண்களோடு கதைப்பதை நான் விரும்பவில்லை. அவள் என்னை ஏமாற்றிவிடுவாள் என்ற பயமே என்னை ஆட்டிப் படைக்கின்றது. அவளை நான் நம்பலாமா?

கமலநாதன், வாழைச்சேனை.

ப: இத்தகைய சந்தேகம் ஏற்படுவதற்கு பலவிதமான காரணிகள் இருக்கலாம். எம்மைக் காதலிக்கும்படி நாம் யாரையும் வற்புறுத்த முடியாது. ஆட்கொணரவும் (possess) முடியாது. அப்படியான காதல் ஒருதலைப்பட்சமானதாகவே இருக்கும். இந்த நிலையில் உருவான காதலில் ஒருவரை ஒருவர் சந்தேகிப்பதற்கு இடமுண்டு. பூரணமான சுதந்திரத்தில் ஏற்பட்டிருந்த காதலாயிருந்தால் அதாவது ஒருவருடைய பண்பு, பழக்க வழக்கம், நேர்மை, அழகு ஆகியவற்றினால் தூண்டப்பட்டு, இரு சாராரும் மனம் விரும்பி காதலை ஏற்படுத்திக் கொள்ளும்போது வீண் சந்தேகத்திற்கு இடம் இராது. ஆயினும் நான் காதலித்து ஒரு பெண்ணை திருமணம் செய்வதை விட, என்னை எவள் காதலிக்கிறாளோ அவளையே நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன் என்ற அடிப்படையில் ஒரு ஆண் இருப்பின் அவர்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

நீங்கள் அவன்மேல் அதிக அன்பு கொண்டிருந்தால் அவளும் உங்களை அந்த அளவுக்கு அன்பு செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து அது நடக்காதபோது அதன் விளைவு அதிக வேதனையாகிவிடலாம். எனவே நாளடைவில் உங்களோடு பழகும் முறையைக் கொண்டு

அவளும் உங்களை விரும்புகிருளா என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

அப்படி அவள் உங்களை விரும்புகிருள் என்று தெரிந்தால் இப்படியான பயம், சந்தேகம் அவள் மற்ற ஆண்களோடு கதைக்கும்போது ஏற்படுவது தவிர்க்க வேண்டியதொன்ருகும். ஒரு பெண் ஒருவனைக் காதலிக்க ஆரம்பித்து விட்டால், அவன் ஒரு கொலைகாரனுக மாறினுலும் தன் காதலை மாற்றமாட்டாள். இது பெண் இனத்தின் மனநிலை. இப்படியாக சந்தேகிப்பது திருமண வாழ்க்கைக்கு இடையூருக அமைவதை பின்புதான் ஆண்கள் உணருகின்ருர்கள். மனைவியானவள் மனத்தில், தன்னை இவ்வளவு தூரம் நம்பாமல் இருக்கின்ருரே என்ற வைராக்கியத்திற்கு அத்திவாரமிடுகிருர்கள். இது மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு பெரிய தொரு தடையாகும். எனவே, அநாவசியமான பயத்தை ஆண்கள் நீக்க வேண்டும். நீங்கள் சற்றுப் பரந்த மனப்பான்மையுடன் அப் பெண்ணின் நடைமுறைகளை நோக்குவது உங்கள்மீது அவள் அதிக அன்பு, மதிப்பு வைக்க உதவியாக இருக்கும்.

ஆனந்தம் உள்ள வாழ்க்கையில்
அன்பு, பாயும் ஆற்றுநீர்;
சந்தேகம் உள்ள உள்ளத்திலோ
அன்பு, வெறும் கானல்நீர்.

---

விதி நல்லவர்களின் நண்பன்;
அறிவாளிகளின் வழிகாட்டி;
மூடர்களின் சர்வாதிகாரி;
கெட்டவர்களின் விரோதி.

— அல்கா

# 'கொடுக்கல் — வாங்கல்' ஆய்வு—4

## ( Transactional Analysis )

— *பிரக்சீட் அன்ரனி* M. A. —

ஒருநாள் திருமதி செல்வா என்னிடம் ஒரு முறைப்பாடு கொண்டுவந்தார். அது அவளது விவாகரத்து பற்றியது. இதைக் கேட்டதும் நான் அதிசயப்பட்டேன். காரணம், எல்லா வசதிகளும் நிறைந்தவளும், நல்ல குடும்பத்தில் பிறந்தவளும், நாலு பிள்ளைகளுக்குத் தாயுமானவள் என்பதால். பல கேள்விகளைக் கேட்டு அவளது விவாகரத்துக்கான காரணங்களை அறிய முயற்சித்தேன். அவளது பதிலில் கணவனைப் பற்றிய நல்ல கருத்துக்களே மிளிர்ந்தன:

> ''என்னுடைய கணவன் மிகவும் பொறுமைசாலி. ஆயினும் அவருக்கு குடும்பத்தை காட்டிலும் வேலை தான் முக்கியமாகத் தோன்றுகிறது. காலையில் வேலைக்குப் போகின்றவர் மாலையில் வெகுநேரம் கழித்தே வீடு வருகின்றார். இதனிமித்தமே நான் இம் முடிவுக்கு வந்தேன்.''

ஒவ்வொரு மனிதனிலும் ''குழந்தை'' (Child) ''வயது வந்தோர்'' (Adult), ''பெற்றோர்'', (Parent) ஆகிய மூன்று சக்திகள் மாறிமாறி செயற்படுகின்றன. ''பெற்றோர்'' — இற்குரிய நிலைகளையும் ''குழந்தை'' — இற்குரிய நிலைகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து அவ்வாறு ஆராயும்போது ஏற்படும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் சந்தித்து, தீர்க்கமான முடிவுக்கு வருபவனே ''வயது வந்தோன்". அவன் ஒரு முடிவுக்கு வரும்போது ''பெற்றோர்'' சக்தியோ அன்றேல் ''குழந்தை" சக்தியோ முட்டுக்கட்டையாக இருக்கமாட்டாது. இங்கு செல்வா தன்னகத்தில் செயற்படும் ''பெற்றோர்'', ''வயது வந்

தோர்'' சக்திகளை வேறுபடுத்த முடியாதவாறு இரண்டும் குழம்பிய நிலையில் ''குழந்தை'' சக்தி தடைபட்டவனாய் காணப்படுகின்றான். எல்லோருடனும் விசேடமாக, மனைவி, பிள்ளைகளிடம் சிடுசிடுக்கின்றான். இறந்தகால வாழ்க்கைப் பதிப்பே அவனை இவ்விதம் செயற்பட வைக்கின்றது.

ஆரம்ப காலத்தில் செல்வா ஓடிவிளையாட எத்தனிக்கும் ஒவ்வொரு தடவையும் பெற்றோர் அவனை கண்டிக்கிறார்கள். ''இது ஓடி விளையாடுகின்ற நேரமல்ல, போய் அறைக்குள் இரு'' — இத்தகைய எச்சரிக்கையையே பெற்றோரிடமிருந்து அடிக்கடி கேட்டு, அவர்களுக்கு அமைந்து நடக்கப் பழக்கப்படுத்திக் கொண்டான். தன்னுள் இருக்கும் ''குழந்தை'' -- சக்தியைத் தடைப்படுத்தியதால் நாளடைவில் மற்றவர்களும் அவ்வாறே செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கிறான்.

இப்படிப்பட்ட நிலையிலுள்ள ஒருவன் தன்னுள் இருக்கும் எண்ணங்களால் மற்றவர்களைத் தீர்ப்பிடுவானே தவிர, அவர்களது எண்ணங்களை அலசி ஆராயமாட்டான். பழைய செய்கைகளால் பாதிக்கப்பட்ட செல்வா, தன்னுடைய மனைவி, மக்களை முழுமையாகப் புரிந்துகொள்ளத் தவறினான். அத்தோடு சிந்தித்து, தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தத்தளித்தான்.

இப்படியானவர்கள் உளவியல் ஆலோசகர்களின் உதவியை நாடுதல் அவசியம். ஆலோசகர் தன்னிடம் வந்திருக்கும் நபரை, நம்பிக்கையால் வென்று, பக்குவமான முடிவை எடுக்க உதவி செய்வார். சில வாரங்களாக, என்னிடம் உளவியல் ஆலோசனை பெற்ற செல்வா, தன்னுடைய நிலையை உணர்ந்து இப்பொழுது தெளிவுடன் செயற்படுகின்றார். இப்பொழுது, திருமதி செல்வா பழைய முறைப்பாட்டை முற்றாக மறந்துவிட்டாள். (தொடரும்)

# வாசகர் பூங்கா

**சேவை வளர்க...**

என் சிறுகதையைப் பிரசுரித்து எனக்கு உற்சாகம் ஊட்டியதற்கு நன்றி. ''நான்'' இன் சேவை இன்னும் பல எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்க வாழ்த்துகின்றேன்.

பேகம் சுரையா,
புசல்லாவை.

**பாராட்டுகின்றேன்**

''தாழ்வுணர்ச்சி'' சிறுகதையை உண்மைச் சம்பவம்போல் உணர்வூட்டக்கூடிய வகையில் தந்த பேகம் சுரையாவிற்கு என் பாராட்டுக்கள்.

L. ரதி, புங்கையூர்.

**சாட்டையடி**

அமிழ்தான கவிதை மூலம் சாதிப்பிரச்சனைக்கு சாட்டையடி கொடுத்த அமலமதிக்கு வாழ்த்துக்கள்.

ஆர். ரஞ்சித், திருமலை.

**நான் + ''நான்''**

நான் இருளில் நின்றால்
'நான்' ஒளி விளக்கு!
நான் நோயுற் றிருந்தால்
'நான்' மருந் தெனக்கு!
நான் அறிய விரும்பினால்
'நான்' அறி வூட்டும்!
நான் வாழ விரும்பினால்
'நான்' வழி காட்டும்!

சம. கண்ணன், முருங்கன்

**உயர்ந்தவர்கள்**

'உள்ளத்தில் நல்லோர் எல்லாம் உயர்ந்தவர்கள்' என்றாற்போல விஜயனும் தேவியும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள்.

சிவபாலன், நீர்கொழும்பு

**போதும்**

'நான்'இன் விலை கூடினாலும் பரவாயில்லை; அதன் தரம் குறையாமல் இருக்கிறதே. அது போதும்.

மலர், கற்பிட்டி.



எமது

அடுத்த

வெளியீடு

தவறு

'GUILT'

உங்கள் ஆக்கங்களை

உடனே அனுப்பிவையுங்கள்

நவீன

சிகையலங்காரத்திற்கு

விஜயம்

செய்யுங்கள்

THE ULTRA
MODHAIR DRESSERS

SALON RANEE
13, KING STREET,
KANDY.


பிராவி அச்சகம், 274, டீ. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி.